BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:41 **தேதி:-14.05.2015**

தேசிய கவுன்சில் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

14.05.2015 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற தெசியக் கவுன்சில் கூட்டத்தின் நிகழ்வுகள் தொடர்பாக நமது மத்திய சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையின் தமிழாக்கத்தை கீழே கொடுத்துள்ளோம்.

இந்த தேசிய கவுன்சில் கூட்டத்திற்கு BSNLன் DIRECTOR(HR) திரு A.N.ராய் அவர்கள் தலைமை தாங்கினார். ஊழியர் தரப்பு செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் கீழ்கண்ட விஷயங்களை கூட்டத்தின் துவக்கத்தில் தெரிவித்தார்.

- தேசிய கவுன்சில் கூட்டம் நடத்துவதில் ஏற்பட்டுள்ள அதீத கால தாமதத்திற்கு தனது ஆழ்ந்த கவலையை பகிர்ந்து கொண்டார். தேசிய கவுன்சில் கூட்டம் என்பது மாநில மற்றும் தலமட்ட கவுன்சில்களுக்கு ஒரு மோசமான முன்னுதாரணமாக மாறிவிடக் கூடாது என்பதை தெரிவித்தார்.

- தேசிய கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகள் முறையான காலத்தில் அமுல்படுத்தப் படுவதில்லை என தெரிவித்தார். உதாரணமாக 30.01.2013 அன்று நடைபெற்ற 28ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவான DRAUGHTS MANகளுக்கு மற்றுமொரு JTO தேர்வு நடத்தப்படும் என்பது இன்னமும் அமுலாக்கப்படவில்லை. 25.09.2014 அன்று நடைபெற்ற 31ஆவது தேசிய கவுன்சில் கூட்டத்தில் IMMUNITY FROM TRANSFER தொடர்பான கார்ப்பரேட் அலுவலக கடிதத்தில் மாற்றம் செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. எனினும் அந்த கடிதம் 07.05.2015 அன்று தான் வெளியிடப் பட்டது. தேசிய கவுன்சிலில் எடுக்கப்பட்ட முடிவுகளை அமுலாக்குவதில் ஏற்படுகின்ற இத்தகைய காலதாமதம் கார்ப்பரேட் நிர்வாகத்தின் திறமையின்மையை வெளிக்காட்டுகிறது என்று சுட்டிக் காட்டினார்.

- தேவைப்பட்டதென்றால் ஊதிய மாற்ற ஒப்பந்தத்தை மாற்றியமைத்தாவது ஊதிய தேக்க நிலை பிரச்சனையை தீர்வு காண வேண்டும் என 06.05.2015 அன்று நடைபெற்ற கூட்டத்தில் BSNL நிர்வாகத்திற்கு RLC அறிவுறுத்தி உள்ளார். RLCயின் இந்த அறிவுரை சரியான புரிதலோடு அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

- மாற்றியமைக்கப்பட்ட JTO தேர்வு விதிகள் மற்றும் E-1 ஊதிய விகிதம் ஆகியவை ஒரு வருட காலமாக BSNL இயக்குனர் குழுவில் தேங்கி கிடக்கிறது. மேலும் கால தாமதமின்றி இயக்குனர் குழு இதற்கு ஒப்புதல் தர வேண்டும்.

- தரைவழி சந்தாதாரர்களுக்கு இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரை 'வரம்பில்லா இலவச அழைப்புகள்' திட்டத்தை நிர்வாகம் அறிவித்துள்ளது. இந்த வசதி பணியில்

உள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

- அலுவலக வளாகத்திற்குள் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடை செய்யும் கடிதத்தை BSNL நிர்வாகம் உடனடியாக திரும்ப பெற வேண்டும். இல்லையெனில் நிறுவனத்தில் தொழில் அமைதி பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஆய்படு பொருட்களின் மீதான் விவாதம்

1. **22.07.1997 முதல் 08.09.2000 வரை நடைபெற்ற/முடிவுகள் அறிவிக்கப்பட்ட தேர்வுகளில் SC/ST போட்டியாளர்கள் பிரச்சனையில் இலாகா போட்டி தேர்வுகளில் தகுதிகளை தளர்த்துவது**:- உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் இந்த தேர்வுகளில் இட ஒதுக்கீடு அமுல்படுத்தப்பட வேண்டும் என ஊழியர் தரப்பில் கடுமையாக வாதிடப்பட்டது. DOP&Tயின் ஒப்புதல் இன்றி நீதிமன்ற உத்தரவுகள் அமுலாக்க இயலாது என்பதால், இந்த பிரச்சனை DOP&Tக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாக நிர்வாகம் தெரிவித்தது.

2. **DOTயில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கான ஓய்வூதிய பிரச்சனையில், DOTயின் 15.06.2006 ஆம் தேதியிட்ட கடித எண்:1-45/2003-Bல் உள்ள உத்தரவுகளை திரும்ப பெறுவது**:- BSNL ஊழியர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குவதற்கு, BSNLல் இருந்து பெறும் தொகையின் 60% என உள்ள கட்டுப்பாட்டை அரசாங்கம் நீக்க வேண்டும் என ஊழியர் தரப்பில் கடுமையாக வாதிடப்பட்டது. விரிவான விவாதத்திற்கு பின் ஊழியர்களின் வருத்தங்களையும், கருத்துக்களையும் DOTக்கு தெரிவிக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.

3. **BSNL MRS திட்டத்தை மறுபரிசீலனை செய்வது**:- ஊழியர்களின் சிரமங்களை தீர்ப்பதற்கு தற்போதுள்ள BSNL MRS திட்டத்தை மறுபரிசீலிப்பதற்கான ஒரு குழுவை அமைக்க வேண்டும் என ஊழியர் தரப்பு கடுமையாக வாதிட்டது. தற்போது இந்த திட்டத்தின் படி ஊழியர்கள் செலவு செய்யும் தொகையின் 50% மட்டுமே அவர்களுக்கு திரும்ப கிடைக்கின்றது என்ற அடிப்படையில் அது கோரப்பட்டது. மேலும், நல்ல பல மருத்துவமனைகள் BSNLன் EMPANALMENTல் இருந்து விலகிக் கொண்டுள்ளன. விவாதங்களுக்கு பின் ஊழியர் தரப்பு கேட்டுக் கொண்டபடி ஒரு குழுவை உருவாக்க நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

4. **TMகளாக பதவி உயர்த்தப்பட்ட TSMகளுக்கு ஜனாதிபத்திய உத்தரவு(Presidential orders) வழங்குவது**:- 30.09.2000க்கு முன் TSM அந்தஸ்து வழங்கப்பட்டு அதற்கு பின் நிரந்தரமாக்கப் பட்டவர்களுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்கப்பட்டு விட்டது. ஆனால் 30.09.2000க்கு முன் TSM அந்தஸ்து வழங்கப்பட்டு நேரடியாக Telecom Mechanicகளாக பதவி உயர்வு வழங்கப்பட்டவர்களுக்கு இதுவரை ஜனாதிபத்திய உத்தரவு வழங்கப்படவில்லை. ஜனாதிபத்திய உத்தரவு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என ஊழியர் தரப்பில் கோரப்பட்டது. மாநிலங்களில் இருந்து விவரங்கள் கேட்கப்பட்டுள்ளதாகவும், அது வந்த பின் DOTயின் ஒப்புதலுக்கு பின் அவர்களுக்கு அவர்களுக்கு ஜனாதிபத்திய உத்தரவு வழங்கப்படும் என நிர்வாகம் பதிலளித்துள்ளது.

5. **மாநில மற்றும் அகில இந்திய மட்டங்களில் WORKS COMMITTEEகள் உருவாக்குவது**:- மாநில மற்றும் அகில இந்திய மட்டங்களிலும் WORKS COMMITTEEகள் உருவாக்கப்பட வேண்டும் என ஊழியர் தரப்பில் கடுமையாக வாதிடப்பட்டது. மாவட்ட மட்டங்களிலும் WORKS COMMITTEEகள் முறையான கால அவகாசத்தில் நடைபெறுவதில்லை என கடுமையாக எடுத்துரைத்து அவை முறையான காலத்தில் நடத்துவதை உறுதி செய்ய வேண்டும் எனக் கூறினர். விவாதங்களுக்கு பின் மாநில மட்டங்களில் WORKS COMMITTEEகள் உருவாக்குவது என்கிற கோரிக்கையை பரிசீலிப்பதாக நிர்வாகம் ஏற்றுக் கொண்டது. மாவட்ட மட்டங்களில் முறையான காலங்களில் WORKS COMMITTEEகள் நடத்துவதை உறுதி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் நிர்வாகம் உறுதி கூறியது.

6. **தேக்க நிலை ஊதியம் (STAGNATION INCREMENT) கிடைக்கபெறாதது, மற்றும் NEPP அடிப்படையில் கிடைக்க வேண்டிய Increment கிடைக்காதது ஆகிய பிரச்சனைகள் தீர்வு காணப்படவேண்டும்.**
7. **NEPP பதவி உயர்வின் போது அடிப்படை ஊதியம் குறைவது என்கிற ஊதிய குழப்பத்திற்கு (ABBERATION) தீர்வு காணப்படவேண்டும்.**
இந்த இரண்டு பிரச்சனைகளும் RM, Group D மற்றும் Industrial கேடர்களில் ஏற்பட்டுள்ள ஊதிய தேக்கநிலை தொடர்புடையது. 06.05.2015 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது RLC வழிகாட்டியதை ஊழியர் தரப்பு சுட்டிக் காட்டியது. அந்த வழிகாட்டுதலில் BSNL நிர்வாகம் ஊழியர் தரப்போடு பேச்சு வார்த்தை நடத்தி, தேவையென்றால் ஊதிய மாற்ற ஒப்பந்தத்தை மாற்றியமைத்து கூட இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. விவாதங்களின் போது ஊதிய தேக்க நிலை பிரச்சனையால் மொத்தமாக 16,000 ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் 8,501 ஊழியர்கள் NE-3 ஊதிய விகிதத்தில் இருப்பதாகவும் நிர்வாகம் தெரிவித்தது. இந்த பிரச்சனையில் மறு பரிசீலனை செய்து DOTக்கு பரிந்துரைக்கப்படும் என நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

8. **பாலியல் தொந்தரவுகளுக்கு எதிரான கமிட்டியில் சங்கங்களின் பெண் பிரதிநிதிகளையும் உட்படுத்துவது குறித்து**:- இந்தக் கமிட்டியினை சிறப்பானதொரு கமிட்டியாக மாற்ற சங்கங்களின் மகளிர் உறுப்பினர்களையும் இணக்க வேண்டும் என ஊழியர் தரப்பு கோரியது. கடுமையான விவாதங்களுக்கு பிறகு, அரசின் சட்டங்கள் அதற்கு இடம் தருவதில்லை எனக்கூறி அதனை ஏற்க நிர்வாகம் மறுத்து விட்டது.

9. **எம்.டி.என்.எல் பகுதிகளில் பணியாற்றும் பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு ரூ.200 மதிப்பிலான சிம் வழங்குவது குறித்து**:- எம்.டி.என்.எல் பகுதிகளில் பணியாற்றும் பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கு ரூ.200 மதிப்பிலான சிம் வழங்குமாறு ஊழியர் தரப்பு உறுதியாக கோரியது. இந்த 200ரூ சிம் கார்டில் இதர தொலைபேசி நிறுவனங்களின் எண்களுக்கும் பேசும் வசதி (OTHER NETWORK CALLS) கோரியது. நிர்வாக தரப்பு இந்த இரு கோரிக்கைகளையும் பரிசீலிப்பதாக ஏற்றுள்ளது.

10. **அந்தமான் நிகோபர் தீவுகளை பிரதான நிலப்பகுதியுடன் இணைக்க கடலுக்கடியில் ஒ.எஃ.ப்.சி கேபிள்களை பதிப்பது குறித்து**:- அந்தமான் நிகோபர் தீவுகளுக்கும் பிரதான நிலப்பகுதிக்கான இணைப்பை கடலுக்கடியில் கேபிள்களை

பதிப்பது மூலமாக வழங்கப்பட வேண்டும் என ஊழியர் தரப்பு கோரியது. இது இந்திய அரசாங்கத்தால் மட்டுமே செய்யமுடியும் என்று நிர்வாக தரப்பு கூறியது. எனினும் தற்போது அந்தமான் நிகோபர் மாநில நிர்வாகம் செலுத்தி வரும் பாண்ட் வித் கட்டணங்களை உள் துறை அமைச்சகமே ஏற்கலாம் என்ற தகவலை தெரிவித்தனர். மேலும் தற்போது அந்தமான் நிகோபர் மாநில நிர்வாகம்பழைய சேட்டிலைட்டிலிருந்து பெற்று வரும் பாண்ட் வித்களுக்கு பதிலாக புதிய சேட்டிலைட்டு களிடமிருந்து பெறப்படும் என்பதையும் நிர்வாகம் தெரிவித்தது.

11. **ஒருமுறை என்ற அளவில் அந்தமான் நிகோபர் மாநிலத்தில் சீனியர் டி.ஓ.ஏ மற்றும் டி.டி.ஏ க்களை புதிதாக ஆளெடுப்பது குறித்து**:- அந்தமான் நிகோபர் மாநிலத்தில் ஊழியர்கள் எந்த அளவுக்கு மிகவும் சிரமமான சூழலில் பணியாற்றுகிறார்கள் என்பதை ஊழியர் தரப்பு விளக்கியது. மேலும் அம்மாநிலத்தில் கடுமையான ஆள் பற்றாக்குறை நிலவுவதையும் விளக்கி, சிறப்பு ஆளெடுப்பு தேவை என்பதையும் விளக்கியது. எனினும் நிர்வாகம் புதிய டி.டி.ஏ க்களின் நேரடி நியமனத்தை விரைவு படுத்த மட்டும் ஏற்று கொண்டுள்ளது.

12. **ஒரு நகரத்தின் 8 கிலோ மிட்டர் தூரத்திற்குள் உள்ள கிராம பகுதிக்கும் அந்த நகர்த்துக்கு வழங்கப்ப்டுவது போல் HRA வழங்குவது குறித்து (அதாவது 26-2-2009 பிறகும் தொடர்வது குறித்து)**:- பிற மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கியது போல விஜயவாடா ஆட்சியர் கொடுத்த சான்றிதழ் அடிப்படையில் போரன்கி கிராமத்துக்கும் விஜயவாடா நகரத்துக்கு வழங்குவது போன்ற HRA வை 26-2-2009 க்கு பிறகும் நீட்டிக்க ஊழியர் தரப்பு கோரியது. நிர்வாகம் மத்திய அரசு ஊழியர்களும் 10 சத HRA தான் பெறுகின்றனர், 20 சதம் அல்ல எனக் கூறி இதை ஏற்கவில்லை.

13. **காலியான ஊழியர் குடியிருப்புக்களை சிறப்பாக பயன்படுத்துவது குறித்து**:- நீண்ட விவாதத்துக்கு பின் இறந்து போன ஊழியரின் துணைவியருக்கு குடியிருப்புக்களை ஒதுக்குவதில் போடப்பட்டுள்ள நிபந்தனைகளை தளர்த்த ஏற்றுள்ளது.

14. **நக்சல் பகுதிகளில் பணிபுரியும் ஊழியருக்கு சமூகப்பாதுகாப்பும், பிற சலுகைகளை நீட்டிப்பது குறித்து**:- அதிக விவாதத்துக்கு பின் நக்சல் பகுதிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சமூகப்பாதுகாப்பு அளவைகளை நீட்டிக்க முடியுமா என பரிசீலிப்பதாக கூறியுள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்